# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



3வது இதழ் வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின்



நதி 13 MARCH 01, 2003 பாலம் 05


**கிரிக்கெட் உலக கோப்பை 2003**

குறைந்த பந்து வீச்சுக் களில் அதிக அளவு ஓட்டங்க ளைப் பெற்ற கனேடிய வீரர் ஜோன் டேவிட்சன்



**உலகக் கோப்பையில் அதிவிரைவு சதம்:**
கனடாவின் ஜோன் டேவிட்சன் எடுத்தார்

**ஜோகன்னஸ்பர்க், பெப்ரவரி 23:** உலககோப்பை 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக 67 பந்துகளில் சதத்தைப் பூர்த்தி செய்தார் கனடா வீரர் ஜோன் டேவிட்சன்.

உலகக் கோப்பையில் அதி விரைவு சதம் இது. இதற்குமுன் 1983இல் சிம்பாவேவுக்கு எதிரான ஆட்டத்தில், ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் கபில்தேவ் 72 பந்துகளில் சதத்தைக் கடந்தார்.

சர்வதேச ஒரு தின ஆட்டங்களில் அதி விரைவு சதங்களில் 5வது இடத்தைப் பிடித்துள்ளது டேவிட்சனின் விளாசல்.

**அதிவிரைவு சதங்கள் பட்டியல்:**

(வீரர், எவ்வளவு பந்துகளில் சதம், அந்த இன்னிங்ஸில் எடுத்த ரன்கள், நாடு, எதிரணி, ஆண்டு என்ற வரிசையில்....)

ஷாகித் அஃப்ரிதி, 37 (102), பாகிஸ்தான், இலங்கை, 1996.
பிரையன் லாரா, 45 (117), மேற்கு இந்தியத் தீவுகள், வங்கதேசம், 1999
சனதஜெயசூர்ய, 48 (134), இலங்கை, பாகிஸ்தான், 1996.
முகமது அசாருதீன், 62 (108), இந்தியா, நியூசிலாந்து, 1988.
பசிட் அலி, 67 (127), பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், 1993.
ஜோன் டேவிசன் 67 (111), கனடா, மேற்கிந்தியத் தீவுகள், 2003


(தொடர்ச்சி எட்டாம் பக்கம்)


## முத்தி நல்கும் காசி இராமேசுவரம்

மனிதப் பிறவியில் மீண்டும் பிறவாத தன்மையைப் பெறுதல் வேண்டும். இதுவே சிவலோக வாழ்வாகும். மனிதப் பிறவியின் குறிக்கோள் இதுவேயாகும். எனவே இறைவனின் சிவலோக வாழ்வினைப் பெறுவதற்கு தமிழகத்தில் சிறப்பு மிக்க சிவதலங்கள் உண்டு. இவற்றுள் ஒன்றாக விளங்குவது கடற்கரையோரத்தில் உள்ள இராமேசுவரத் திருக்கோயில் ஆகும். இத் திருக்கோயிலை பக்தியோடு வணங்கிப் போற்றினால் பிறவிப் பயனும் பாவவினைகளும் நீங்கப் பெறுவதோடு புத்திரப் பாக்கியமும் கிடைக்கப்பெறும். இதுவே இறைவனின் திருவருள் வாக்காகும். திருமாலின் அவதாரமாகிய தோன்றியவர் இராமர் பிரான். இராமாயணத்தில் இவர் தெய்வீக மகனாக காட்சியளிக்கின்றார். சிவபக்தனாகிய இராவணனைக் கொன்றமையால் இராமபிரானுக்கு பிரம்ம கத்திதோசம் ஏற்படலாயிற்று. இதனால் இராமபிரான் இரா மேசுவரத்தில் கடற்கரையோரமாக ஒரு சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து சிறப்பாக வழிபாடு செய்தமையால் இராவணனைக் கொன்ற பாவம் முழுமையாக நீங்கப் பெறலாயிற்று. இராமர் பூசித்த சிவலிங்கத்தில் இறைவன் காட்சியளித்து அருள் புரிந்த செயல் என்றும் வியப்பிற்குரியது. இவ்வாறு பெருமைக்குரிய சிவலிங்கம் தான் இராமேசுவரத் திருக்கோயில் மூலவராக எழுந்தருளி நல்லருள் புரிகின்றார். மூலவராகிய சிவலிங்கத்திற்கு இராமலிங்கம் என்ற திருநாமம் உண்டு. இதனைவிட மக்கள் இச் சிவலிங்கத்தை இராமநாதசுவாமி என்றும் இராமேசர் என்றும் போற்றி வணங்கு வதைக் காணலாம். இராமலிங்கப்பெருமானின் வலது பக்கத்தில் அனுமான் காசியில் இருந்து கொண்டு வந்த சிவலிங்கப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய பூசை வழிபாடுகளை சிறப்பாகச் செய்தவர் இராமபிரான். இவ்வாறு பெருமை பெற்ற சிவலிங்கம் 'காசிலிங்கம்' என்ற நாமத்தோடு நல்லருள் புரிகின்றார். பக்கதர்கள் காசிலிங்கத்தை காசி சிவலிங்கம் என்றும் 'காசி விசுவநாதர்' இலிங்கம் என்றும் போற்றி வழிபடுவதைக் காணலாம். காசிலிங்கம், இராமலிங்கம் கரிய இரு சிவலிங்கத்திற்கும் கங்கை நீரினால் அபிடேகம் இன்னும் நிகழ்வதைக் காணலாம். வட இந்தியாவின் கங்கைக் கரையில் அமைந்துள்ளது காசித்தலம். இது மிகவும் புகழ்பெற்றுள்ளது. இதனைப் போன்ற இராமேசுவரக் கடற்கரையில் அமைந்துள்ளது இராமேசுவரத்தலம். இதுவும் காசியைப் போல புகழ்பெற்று விளங்குவதைக் காணலாம். இதனால் இத்தலம் காசி இராமேசுவரம் என்றும் பக்தர்கள் போற்றி வழிபடுவதை சிறப்பாகக் காணலாம். எனவே இராமேசுவரத் திருக்கோயில் மாசிமாத மகா சிவராத்திரி தினம் மிகச் சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம். ஏனெனில் இங்குள்ள அக்கினி தீர்த்தமாகிய கடலில் மூழ்கி நீராடினால் அவன் அருளால் முக்தி கிடைக்கும் என்ற திடமான நம்பிக்கையே ஆகும். இதனைவிட 22 விசேடமான தீர்த்தக் கிணறு களும் இத் திருக்கோயில் உள்ளே உள்ளது. எனவே கனடாவில் வாழும் சைவமக்கள் சிவராத்திரி நன்னாளில் இராமேசுவத் திருக்கோயிலை கரம்குவித்து வணங்கினால் பிறவிப்பயன் நீங்கப்பெறும் என்பது நிச்சயம். (தொடர்ச்சி 7ஆம் பக்கம்)


வசந்தா நகை மாளிகை



தொழிற்சாலை
Since 1987
வசந்தன், பத்மநாதன் பத்தர்களின் கைவேலைப்பாடு
Tel: 905-848-5151
Fax: 905-848-8502
10:00AM-8:30PM
திங்கள் மூடப்படும்
3025 HURONTARIO ST.
UNIT 103A
MISSISSAUGA, ON
L5A 2H1 CANADA

Singapore Communication

$30.00 / m
- 50 mins daytime Free
- Lunch Hr (12 - 1pm) Free
- Evenings & Weekends Free

$40.00 / M
- 350 mins daytime Free
- Evenings & Weekends Free
- V/M, C/D*, C/C & C/W FREE
- Call For More Info

HURRY PROMOTION ENDS SOON

Buy one Accessory & Get One ½ Price




OFFICE: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

London Life
Liberty Mutual

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

FAMILY MEDICAL CENTRE
DR. D. KURUNATHAN
(MBBS, MD, CCFP)
Female Family Physician



Tel: 416.293.7700
880 Ellesmere Rd., #201, Scarborough, ON HOPPER HUT இற்கு அருகாமையில்

# அறிவும் ஆக்கமும் 120

## விஜய குலத்துங்கம்



நீங்கள் ஒரு ரோஜாப் பூச் செண்டை எடுத்தால் நுனியில் ஒரு பூவும் அதன் கீழ் பல இலைகளும் இருக்கும். அதிகமான பூ ம ர ங் க ளி ன் இ தே நிலைதான். ஆனால் அந்த இலைகள் எல்லாமே வர்ணங்கள் உடையதாக பூவைப் போலவே இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும். தாயகத்தில் குரோட்டன் செடியின் இலைகள் பல நிறங்களில் அழகாக இருக்கும். ஆனால் இலைகளைப் பூக்களாக மாற்றும் வல்லமை இப்போது தாவரவியல் விஞ்ஞானிகளால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

தாவரங்களில் உள்ள மரபணு (gene)களைப் பற்றிய வெவ்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்த போது San Diego இலுள்ள கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தாவரவியல் விஞ்ஞானிகள் எப்படி இலைகளை பூ இதழ்களாக மாற்றலாம் என கண்டு பிடித்துள்ளார்கள். இந்தக் கண்டுபிடிப்பு ஈயத்தை எப்படி தங்கமாக மாற்றலாம் என்ற கண்டு பிடிப்பிற்கு நிகரான தாவரவியல் கண்டு பிடிப்பு எனக் கருதப்படுகின்றது.

இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி பார்ப்பதற்கு முன்னர் ஒரு பூவின் கட்டமைப்பைப் பற்றி சற்றுப் பார்ப்போம். சாதாரண பூவின் கட்டமைப்பில் நான்கு வட்டங்களில் இதன் பாகங்கள் அமைந்திருக்கும். வெளியில் உள்ள வட்டம் ஆங்கிலத்தில் Sepals எனப்படும். தமிழில் புல்லி எனப்படும். இந்தப் புல்லி என்பது பச்சை நிறத்தில் பூவிதழ்கள் போல், பூவிதழ்களைச் சுற்றி ஒரு வட்டமாக இருக்கும். பூ விரிய முன்னர் மொட்டாக இருக்கும் போது அதைச் சுற்றி புல்லிகள் மூடிப் பாதுகாக்கும். இந்த புல்லி வட்டத்திற்கு அடுத்தபடியாக இருப்பது அழகான நிறங்களில் உள்ள அல்லிகள் அல்லது பூவிதழ்கள் ஆகும். ஆங்கிலத்தில் இதை Petals என்பார்கள். இதற்கு அடுத்ததாக உள்புறமாக இருப்பது ஆண் இனப்பெருக்கப் பாகமான மகரந்தம் அல்லது Stamens என்று சொல்லப்படும். நான்காவதாக சரியாக நடுவில் இருப்பது பெண் பாகமான சூலகமும், குறியும் ஆகும். இதை ஆங்கிலத்தில் Carpel அல்லது Pistils என்று கூறுவார்கள்.

200 வருடங்களுக்கு முன்பாக மரபணு என்பது அறியப்படுவதற்கு முன்னர் இலைகள்தான் உருமாறி பூவின் மேற்குறிப்பிட்ட நான்கு பாகங்களை அல்லது வட்டங்களை உருவாக்குகின்றது எனக் கூறப்பட்டது. எப்படி இருந்தும் அண்மைக் காலம் வரை ஒருவராலும் சாதாரண இலைகளை பூக்களாக மாற்ற முடியவில்லை. அண்மையில் கலிபோர்ணிய சர்வகலாசாலையைச் சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் SEP எனப்படும் ஒரே மாதிரியான மூன்று பூத்தலுக்கு காரணமான மரபணுக்களை கண்டறிந்தார்கள். இந்த மரபணுக்களை விகாரப்படுத்தலின் மூலம் மாற்றியமைத்த போது இவை இதழ்கள், மகரந்தம், சூலகம் ஆகிய எல்லாப் பாகங்களையும் புல்லிகள் போன்று அதாவது பூவைப் பாதுகாக்கும் பச்சை நிற வெளிவட்டமாக மாற்றி விட்டது. இந்த தாவரங்கள் தொடர்ந்து பதி வைத்தல் முறை மூலம் இனப் பெருக்கம் செய்யப்பட்டபோது தொடர்ந்து உருவாகிய தாவரங்களின் பூக்கள் இலைகள் போன்றே காட்சியளித்தன.

இந்தப் பரிசோதனையைத் தொடர்ந்து இப்போது செய்யப்பட்ட பரிசோதனையில் இதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தாவரவியல் விஞ்ஞானிகள் Arabidopsis எனப்படும் கடுகுத் தாவரத்தில் SEP மரபணுகள் மூன்றில், இரண்டையும் பூவிருத்தியில் ஈடுபடும் வேறு மூன்று மரபணுக்களையும் சேர்த்து தாவரத்தில் புகுத்திய போது இலைகளை எல்லாம் பூக்களாக மாற்றக் கூடியதாக இருந்ததை கண்டுள்ளார்கள். இந்த மேலதிக மூன்று மரபணுகள்தான் இதழ்கள், மகரந்தம் சூலகம் போன்றவற்றை உருவாக்கக் காரணமாயுள்ளன. இப்படியாக இலைகளும் பூக்கள் போன்று தோற்றமளிக்கும் படங்களையும் கலிபோர்ணியா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

இவ்வகையான தாவரங்களை உருவாக்க விஞ்ஞானிகள் மிகவும் சிரமப்பட்டனர். ஒரேடியாக 5 மரபணுக்களையும் ஒரு தாவரத்தினுள் புகுத்துவது சிரமம். எனவே ஒவ்வொரு சந்ததிகளாக ஒவ்வொரு மரபணுவையும் புகுத்த வேண்டியிருந்தால் பல வருடங்கள் எடுத்தன. எனவே இப்படியாக உருவாக்கப்பட்ட இலையில்லாத தனிப் பூமரங்கள் விரைவில் பெருமளவில் உற்பத்தியாக்கப்படலாம்.

தாவரவியலில் இன்னுமொரு அரிய கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது. பிளாஸ்திக் ஆனது எமது அன்றாட பாவனையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பலவிதமான பாத்திரங்கள், கொள்கலன்கள் இயந்திர பாகங்கள் போன்றவை பிளாஸ்திக்கினால் செய்யப்படுகின்றன. இவை அதிகமாக பெற்றோலியம் பொருட்களை அடிப்படையாக வைத்துதான் செய்யப்படுகின்றன. இப்போது தாவரங்களும் பிளாஸ்திக்கை உருவாக்க முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாவரங்கள் வெவ்வேறு தேவைகளுக்காக வெவ்வேறு பதார்த்தங்களை உருவாக்குகின்றன. தாவரங்களின் தண்டு இலை போன்றவற்றில் தண்ணீர் வழுக்கிச் செல்லும் வகையிலான ஒரு மெழுகு போன்ற பூச்சை சில தாவரங்கள் கொண்டுள்ளன. வளைத்தாலும் முறியாது; இறப்பர் போன்று வளைந்து கொடுக்கக் கூடியதாகவுள்ளது. சில தாவரங்கள் தனது விதைகளை பாதுகாக்க தடிப்பான ஓட்டினைக் கொண்ட கவசங்களை உருவாக்குகின்றது.

இப்போது தாவரவியல் விஞ்ஞானிகள், தாவரங்களின் கலங்களின் கலங்களில் சில இரசாயனப் பொருட்களை தயாரித்து சேகரித்து வைப்பதற்கான மரபணு ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்கள். Purdue சர்வகலாசாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் Dupontஐச் சேர்ந்த விஞ்ஞானிகளும் பரிசோதனைக் கூடத் தாவர-மான Arabadopsosi என்ற தாவரத்தில் இருந்து இப்படிப்பட்ட மரபணு ஒன்றை Cloning மூலம் உருவாக்கியுள்ளார்கள். இந்த மரபணு தாவரங்கள் பழுதடையாமல் அந்த பாகங்களில், Plasticஐ ஒத்த சேர்வைகளை சேகரிக்கக் கூடியதாகவுள்ளது.

இப்போது பெற்றோலியத்திலுள்ள சேர்வைகளின் சங்கிலிக் கோர்வைகளில் இருந்தே Plastic தயாரிக்கப்படும். இந்த இரசாயன மூலக் கூறுகளின் சங்கிலிக் கோர்வைகள் அல்லது Chain of Compounds ஆனது Polymers பொலிமெர் என்று அழைக்கப்படும். இந்த Polymers இன் தனி மூலக் கூறுகள் Monomers எனப்படும். பெற்றோலியம் பொருட்களில் மிகச் சில Monomers களே காணப்படும். இதனால் தான் இதுவரை பல வகையான Plastic பொருட்களை உருவாக்க முடியவில்லை. ஆனால் புதிய முறையில் தாவர்கள் பல வகையான Monomerஐ உருவாக்கக் கூடியதாகவுள்ளன. இதனால் புதிய வகை பிளாஸ்திக்குகளயையும் தயாரிக்கக் கூடியச் சாத்தியக் கூறுகள் உள்ளன.

தாவரங்களை விட நுண்ணுயிர்களில் இருந்தும் பிளாஸ்திக் தயாரிக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. வயிற்றோட்டத்தை உண்டாக்கும் E-Coli பக்டீரியா பிளாஸ்திக் உற்பத்தியை செய்யக் கூடியதாகவிருக்கின்றது.

ஆனால் தாவரங்கள் மூலம் உற்பத்தி செய்யும் போது செலவு குறைவாக இருக்கும். பெற்ரோலியத்தில் இருந்து எடுக்கப்படும் பிளாஸ்திக்கை தாவரங்களில் உருவாக்க முடியுமென்றால் பெற்றோலியத்தையே தாவரங்களால் உண்டாக்கக் கூடிய நிலையும் இந்த புதிய Genetic Engineering முறை மூலம் கூடிய சீக்கிரத்தில் சாத்தியமாகும் என நம்பலாம்.

விஜே குலத்துங்கத்தின் தயாரிப்பில் நடக்கும் விஞ்ஞான நிகழ்ச்சியான "விஞ்ஞானமும் நாமும்" என்ற நிகழ்ச்சியை இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை TVI தொலைக்காட்சியில் திங்கள் இரவு 9:30 இற்கு பார்க்கலாம்.

* * * * *

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?



கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

**Vitaplex**

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.



| | |
|---|---|
| Vitaplex Shampoo | $9.99 |
| Vitaplex Conditioner | $9.99 |
| Vitaplex Shampoo Plus Conditioner | $18.99 |

கிடைக்கும் இடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*



*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%

Some conditions may apply



For more information call:

**Anil Joshi** at

**416.888.1072**

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**


**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL



## தமிழர் நிர்வாகத்தில் ஒரு EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்: 416-332-0944

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield

5200 Finch Ave., Scarborough **416-332-8451**

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

## ரவி நடராஜா

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555

2095 Weston Road, Suite 203, Toronto, ON

(416) 755-2801

2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

# AVIS. RENT A CAR



## GRAND OPENING

Main & Danforth
2575 Danforth Avenue
Tel: 416 691 3113

## MARCH 1, 2003

1345 Lawrence Ave E
*(Victoria Park & Lawrence)*
Tel: 416 441 1818

4352 Kingston Road
*(Kingston & Lawrence)*
Tel: 416 724 2847

1910 Yonge Street
*(Yonge & Davisville)*
Tel: 416 932 2847

AVIS We try harder. avis.com

# தூறல்



## My father's daughter




மற்றுமொரு NRI (Non Resident Indian) திரைப் படம். இந்தியாவில் இருந்து Dallas, Texasஐ வந்து சேரும் ஒரு குடும்பத்தின் கதை இது. படத்தின் இறுதியில் உண்மைச் சம்பவங் களின் அடிப்படையில் எனக் காட்டி பெயர்களும் உள்ளன.

குடும்பத் தலைவன் Kantiam . (Nichedu Vasmade) பழமைவாதி. தனது கலாசாரம் பெரிது என நினைப்பவர். இந்தியாவில் பெரும் பணக்காரர். அவரது மனைவி சாந்தா (Suraiya Hyden) இங்கு வேலைக்குச் செல்பவள். கணவன் பெறும் சம்பளம் காணாது எனக் கருதுபவள். இந்திய வாழ்வை இங்கும் தொடரவிரும்புபவள். மகன் ரோஹித் புதிய கலாசாரத்துக்குள் தன்னை இழக்க முற்படுகிறான். மகள் Tara (Parull Bhatia) தந்தையை விரும்புகிறாள். அவரை அனுசரித்து செல்லவும் செய்கிறாள். அதேசமயம் புதிய கலாசாரத்தின் பண்புகளையும் அனுபவித்துப் பார்க்கிறாள்.

Taraஇற்கு ஒரு boyfriend அறிமுகமாகிறான். இந்திய, அமெரிக்க கலப்பு.

அதற்கிடையில் தந்தைக்கு வேலை இல்லை. தன்னால் வியாபாரம் செய்ய முடியவில்லை.மனைவியும் வெறுக்கிறாள். போன்ற காரணங்களில் விரக்தியுற்று தற் கொலைக்கு முயற்சிக்கிறார். அதன் பின்னர் அவரது மனைவி, மகன், மகள் அவரைப் புரிந்து கொள்கின்றனர். ஆனால் சமூகம்? மகன் ஒரு இடத்தில் இருக்கும் பொழுது சக இந்தியர்களால் தகப்பனது தற்கொலை முயற்சியை கேலி செய்கின்றனர். மகனின் சீன நண்பனால் அவன் அவ்விடத்திலிருந்து வெளியேறி காரில் வரும்பொழுது கார் விபத்துக்குள்ளாகி மரணமாகிறான்.

**வானரன்**

அதன் பின்னர் மகள் தான் காதலித்தவனையே மணக்கிறாள். தந்தை பீங்கான் கோப்பை வியாபாரத்தில் ஈடுபடுகிறார்.

வழமையான NRI திரைப்படங்களிலிருந்து சற்று விலகி குடிவரவாளர்கள் சந்திக்கும் சில பிரச்சினைகளை வெளிக்கொணர முயற்சிக்கிறது. பிரச்சினைகளின் ஆழத்தை நோக்கி நகர்கிறது. எமது நாட்டிலிருக்கும்பொழுது எமது கலாசாரத்தை எவ்வளவு தூரத்துக்கு நாங்கள் விரும்புகிறோமோ தொடருகிறோமோ அதைவிட பல மடங்கு புலம்பெயர்ந்த பின்னர் நேசிக்கிறோம்.


தொழில்நுட்ப குறைபாடுகள், எடிட்டிங் சீர் இல்லாமை போன்றன இருந்தாலும் இயக்குனர் Bhatia ஓரளவுக்கு தனது திறமையை வெளிக்கொணர்ந்துள்ளார். இசை Jaishree Shivam. நாங்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய படமிது. நாங்கள் சந்தித்த, சந்திக்கின்ற பிரச்சினைகளை படமாக்கியுள்ளது.

**Frida வரலாற்றுக் குறிப்பு**

பிறப்பு - யூலை 06, 1907
1910 - மெக்சிக்கோ புரட்சி
1929 - Diego Rivera உடன் முதல் திருமணம்
1939 - விவாகம் முற்றுப் பெறுகிறது.
1941 - இருவரும் மீண்டும் இணைகின்றனர்
ஜனவரி - 1937 - Trotsky - மெக்சிக்கோவில் அடைக்கலம் பெறுகிறார்.
ஆகஸ்ட் - 1940 - Trotsky படுகொலை செய்யப்படுகிறார்.
யூலை 1954 - Frida இறப்பு

Markham & Ellesmere சந்திக்கருகாமையில் உள்ள Tuexdo Courtஇல் அமைந்துள்ள N.N.Video கடையில் இதன் பிரதிகளை பெற்றுக் கொள்ளலாம். மொழி - ஆங்கிலம்


pundit prithipal
astrologer




Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!

Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances

CALL TODAY at 905-678-8932!

Pundit Prithipal
26 Stedman St.
Malton, ON
L4T 1K5
tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"



UNITED
PERSONAL INJURY ASSOCIATES


வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

The Car Accident People
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்

உங்களுக்குத் தெரியுமா?
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.



விபத்து உங்கள் தவறானாலும் கூட
உங்களால் $ 172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
யுனைட்டெட்

பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேருந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்


பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

தீபன் - (416) 505-9804

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie





# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION

### 2003-2004 ஆண்டிற்கான பாடத் தேர்வுகள் பற்றிய குறிப்புகள்

தரம் எட்டில் பயிலும் மாணவர்களிலிருந்து தரம் 11 வரைக்குமான மாணவர்கள் வரை அடுத்த ஆண்டில் பயில இருக்கும் பாடங்களைத் தேர்வு செய்வது ஒரு முக்கிய விடயம் ஆகும். பாடங்களைத் தெரிவு செய்வது வெறுமனே மாணவர்களது முடிவு மட்டும் அல்லாது, பெற்றோரது சம்மதமும் அதில் காணப்பட வேண்டும் என்பதே உண்மை. ஆனால் இவ் விடயத்தில் எத்தனை பெற்றோர் தமது பிள்ளைகளுடன் கலந்து கொள்கின்றனர் என்பது கேள்விக் குறி? இந்நிலைக்குரிய முக்கிய இரு காரணங்களாக

1. பெற்றோருக்கு இதுபற்றி என்ன தெரியும் என்ற நோக்கில் மாணவர்களே தமது பெற்றோரை இதில் இருந்து ஒதுக்குவதும்
2. தொழில் ரீதியாகவும் மற்றும் வீட்டுக் கடமைகள் ரீதியாகவும் பெற்றோரது கவனக் குறைவு இவ் விடயத்தில் பங்கேற்காமையும்

இவற்றுடன் வேறு சில காரணங்களால் இவ்விடயம் பெரும் சத வீதத்தில் மாணவர்களது சுய விருப்பத்திலேயே தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

ஆசிய மக்களிடையே காணப்படுகிற கல்வி ஆற்றலும் அவர்கள் தமது பிள்ளைகளிடம் வைத்திருக்கும் அபார நம்பிக்கையும், எதிர் பார்ப்புகளும் மேன்மேலும் வளர வேண்டுமானால் இன்றைக்கு ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது பிள்ளைகளின் கல்வி விடயத்தில் அதிக அளவு கவனம் வைத்தால் அன்றி இந்நாட்டு வாழ்க்கை முறையுடன் மொழி அறிவு பற்றாக்குறையுடன் சேர்த்து மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் இடையில் மிகுந்த இடைவெளியை ஏற்படுத்துவதுடன் மாணவர்கள் தமது சுய விருப்பத்தில் பாடங்களைத் தேர்வு செய்வதோடு அவர்களது எதிர்கால திட்டத்தினையும் வீணடித்து வருகின்றனர்.

மாணவர்ளுக்கும் பெற்றோருக்கும் என்று முன்

**சர்மா (சரவணபவ சர்மா)**

அட்டையிலே சுட்டிக் காட்டியபடி வெளியிடப்பட்டு வரும் choices என்கின்ற பாடத் தெரிவு நூலானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் பாடசாலைகள் மூலமாக மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். இந்நூலில் பெற்றோர் தெரிந்திருக்க வேண்டிய ஏராளமான விடயங்கள் அடங்கியுள்ளதோடு பெற்றோரது ஆலோசனை யுடனும், சம்மதத்துடனும் தான் பாடங்களைத் தெரிவு செய்யப் படவேண்டும் என்றும் மிகத் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

பெற்றோர்களோடு பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஏராளமான விடயங்கள் பல இருந்தும் இவ் இதழில் மிக முக்கியமானவை சிலவற்றை கவனத்தில் கொள்கிறேன்.

அக்கடமிக் (Academic) அப்பிளைட் (Applied) என்று அடிக்கடி பேசப்பட்டு வரும் இவ் இரு வேறுபட்ட பிரிவுகள் பற்றி சில பெற்றோர் என்னைக் கேட்டதனால், இவ் விடயம் வேறு சில பெற்றோருக்கும் உதவக் கூடியது என்பதனால் இதைப் பற்றி சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

அக்கடமிக் (Academic) நல்லதா? அல்லது அப்பிளைட் (Applied) நல்லதா என்றுதான் அனைவரும் கேட்பதுண்டு. இதிலே அக்கடமிக் பிரிவில் எடுக்கப்படும் பாடங்கள் கடினமானது என்றும் மற்றையது இலகுவானது என்றும் சில மாணவர்கள் கூட கருத்து வைத்துள்ளனர். ஆனால் அது உண்மை அன்று. அக்கடமிக் (Academic) பாடவிதானமானது பல்கலைக் கழகத்துக்கு உகந்ததும், அப்பிளைட் (Applied) பாடவிதானமானது கல்லூரிகளுக்கும் என்றும் அறிந்திருத்தல் போதுமான விடயம். இதிலே அக்கடமிக்குரிய பாடவிதானம் மற்றையதிலும் விட மேலதிகமாக சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பதே இதில் உண்மையானது அன்றி வேறு எதுவும் இல்லை. மேலும் இது பற்றி அறிகையில்; அக்கடமிக் பிரிவில் பாடங்களை எடுக்கும் ஒரு மாணவர் அப் பிரிவில் தகுந்த புள்ளிகள் எடுக்கத் தவறினும் கல்லூரி செல்வதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால் அப்பிளைட் (Applied) பிரிவில் பயிலும் ஒரு மாணவர் அதில் 100% புள்ளி எடுப்பினும் கூட பல்கலைக்கழகம் செல்ல விரும்பினும் செயற்படுத்த முடியாத விடயமாகி விடுகிறது.

எனவே மாணவர்கள் சிரமம் பாராது Academic பிரிவில் உள்ள பாடங்களையே தெரிவு செய்வது எதற்கும் பிரயோசனமான விடயம் என்பது எனது கருத்து. சில பாடசாலைகளில் மாணவர்களது நிலை மிகவும் தகுதியற்றுக் காணப்படில் அக்கடமிக் பிரிவினைத் தர மறுக்கக் கூடும். ஆயினும் பெற்றோர் இது பற்றி தலையிடுகையில் பாடசாலை அதிக மறுப்பு தெரிவிக்காமல் அவற்றை தரக் கூடிய வாய்ப்புகள் உண்டு.


J DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

**தினசரி நடவடிக்கைகள்** * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs.S.J. சௌந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount) 416-502-3033




Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம் சில்க்



2003ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)



CANADIAN SCHOLARSHIP
TRUST PLAN



Valepuram Gugan

* Depository The Royal Bank
* TrusteeThe Royal Trust
* President John Kearns

* Enrolment Director Bruce Winsor
* Representative Valepuram Gugan

- கனடாவில் 1960ஆம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமும்
- இலாப நோக்கமற்ற RESP நிறுவனமும்
- இன்றுவரை $1Billion முதலும் புலமைப் பரிசாகவும் வழங்கிய நிறுவனமும்
- நான்கு வருடங்களுக்கு புலமைப் பரிசு வழங்கும் நிறுவனமுமாகிய CSTஇல் இணைந்து அரசாங்கம் வழங்கும் 20% நன்கொடைப் பணத்தையும் பெற்று உங்கள் மழலைகளின் கல்விச் செல்வத்தை மேம்படுத்த பல நற்திட்டங்களை உள்ளடக்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாகிய

**Canadian Scholarship Trust Plan**
இல் இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

"நமது இனம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமேயானால் நமது மழலைகளின் கல்விச் செல்வம் பாதுகாக்கப்பட வேண்டும்"

வல்லிபுரம் குகன்

Tel: 416-838-4856/416-297-8507



# நாமும் நமது இல்லமும் 160

**OHOSP**

**Ontario Home Ownership Savings Plan** இந்தத் திட்டம் ஒன்ராரியோ அரசினால் முதல் தடவை வீடு வாங்குபவர்களிற்காக உருவாக்கப்பட்டது. தனிப்பட்டவர் ஒருவரின் கழிவுகளிற்கு பிற்பட்ட வருமானம் (Net Income) $40,000 இற்கு உட்பட்டவர்களும், குடும்பமான வருமானம் $80,000 இற்கும் குறைவாக உள்ளவர்களும் இந்தத் திட்டத்தினால் நன்மை பெறுவார்கள்.

**OHOSP திட்டத்தில் நன்மை பெறுபவர்கள்**

1. ஒன்ராறியோவில் இருத்தல் வேண்டும்.
2. 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. Social Number வைத்திருத்தல் வேண்டும்
4. ஏற்கனவே வீடு வைத்திருக்கக் கூடாது. (மணம்புரிந்தவராக இருந்தால், திருமண நாளிலிருந்து மற்றவர் (கணவன்/மனைவி) வீடு வைத்திருக்கக் கூடாது.
5. ஏற்கனவே OHOSP திட்டத்தில் நன்மை பெற்றிருத்தல் கூடாது.

(Never Opened an OHOSP before)

## ராஜா மகேந்திரன்

**குறிப்பு:** 1. கணவன் / மனைவி ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் இத்திட்டத்தை வைத்திருக்க முடியும்.

2. தனிப்பட்டவர் ஒருவர் $2000 வரை வைப்பீடு செய்வதால் $500 வரை வருமான வரி மீளளிப்பு (Tax Credit), தம்பதியினர் $4000 வரை வைப்பீடு செய்வதால் $1000 வரை வருமானவரி மீளளிப்பு (Taxt Credit) பெறமுடியும். (ஆனால் OHOSP இல் எந்தத் தொகையும் வைப்பீடு செய்யமுடியும்.

3. OHOSP திட்டத்தினால் 5 வருடங்கள் மட்டுமே Tax Credit பெற முடியும். மற்றும் உருவாக்கப்பட்ட திட்டம் 7 வருடங்களிற்குள் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

உதாரணமாக 2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு OHOSP திட்டம் 2004ஆம் ஆண்டுவரை Tax Credit பெறலாம். மற்றும் Jan. 01, 2006 இற்கு முன்பாக இந்தத் திட்டம் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

தனிப்பட்டவர் $2000 வரை வைப்பீடு செய்தால் கிடைக்கும் (OHOSP) Tax Credit முறையே.

| Net Income | contribution | Tax Credit |
|---|---|---|
| Upto $20,000 | $2,000 | $500 |
| $25,000 | $2,000 | $375 |
| $30,000 | $2,000 | $250 |
| $35,000 | $2000 | $125 |
| $40,000 and over | $2000 | $0 |

குடும்பமாக $4000 வரை வைப்பீடு செய்வதால் கிடைக்கும் Tax Credit

| Net Income | Contribution | Tax Credit |
|---|---|---|
| Upto $40,000 | $4,000 | $1,000 |
| $50,000 | $4,000 | $750 |
| $60,000 | $4,000 | $500 |
| $70,00 | $4,000 | $250 |
| $80,000andover | $4,000 | $0 |

முதல் தரம் வீடு வாங்குபவர்கள் இந்தத் திட்டத்தில் வைப்பீடு செய்தால் குறிப்பிட்ட நன்மை பெறலாம் என்பதனை ஞாபகத்தில் கொள்ளவும். இவைபற்றிய மேலதிக தகவல்களைப் பெற Tel.: 1 800 263 7965 Fax: 1 905 433 6777

**தெரிந்திருக்க:**
Toronto Real Estate Board இன் கணக்குக் கருத்துப்படி (ஆண்டிற்குரிய) ஆகக்கூடிய சராசரி விலை $273 698 (1989).

### CONDO FOR SALE

- MCCOWAN & EGLINTON
- 2 BEDROOM
- ENSUITE
- LARGE BALCONY
- SEPARATE DINING ROOM
- ASKING ONLY $144,900.00 (121 TRUDELLE ST.)

### HOUSE FOR SALE

- MARKHAM & SHEPPARD
- 4 BEDROOMS
- 1 BEDROOM BSMT
- WALK OUT BSMT
- MOSTLY NEW WINDOW
- 2 KITCHEN
- MAIN FLOOR HARDWOOD FLOOR
- SINGLE ATTACHED GARAGE•

ASKING ONLY $254,900.00

### TOWN HOUSE RENT

- *ELLESMERE & KENNEDY*
- *3 BEDROOMS*
- *AVAIL. APRIL 01, 03*
- *CLOSE TO HWY 401/ KENNEDY COMMONS*
- *ASKING ONLY $1195.00*

Raja M. Mahendran P.Eng.
T.P: Office- 416-491-4002
Pager - 416-589-4270

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 5.35% |
| Prime rate | 4.50% |
| Bank rate | .75% |

மேலும் பல பக்கங்கள் 17, 18, 19

### உதவியாளர் தேவை

KENNEDY & HUNTING WOOD பகுதியில் 2 வயது பிள்ளையைப் பராமரிப்பதற்கும் அத்துடன் வீட்டு வேலைகளில் சிறு சிறு உதவிகள் செய்வதற்கும் ஒருவர் தேவை.
தொடர்புகளிற்கு: 416-850-8633

### BABY SITTER

உங்கள் பிள்ளைகளை அல்லது வயதானவர்களைப் பராமரிக்க வேண்டுமா? தமிழ், ஆங்கிலம் பேசக்கூடிய 45 வயது பெண்மணியை அழையுங்கள் : 416-699-1022

## EDUCATION FUND SERVICES Inc.

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!



Siva Kanapathypillai
(Divisional Director)

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

**416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044**
**Fax: 416-438-8532 Res: 905-472-1139**
**1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.**

**முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.**




வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் ரீ/மிஅண வீட்டுப் பிரதிநிதி **"கேதா"** வை நாடுங்கள்.



தொடர்புகளிற்கு: **416.677.4707**
**416.491.4002**

**24 hrs**

## INCOME TAX



Tarsem Parmar

- **Incorporation**
- **Business Set-up & Registration**
- **Accounting & Bookkeeping**
- **Payroll, G.S.T. & P.S.T.**
- **Incomes Taxes** (Free E-File)
- **CCRA Audit and Appeals**

## FINANCIAL SERVICES



- **Mortgages**

upto 1.5% below the bank posted rates

- **Lines of Credit**
- **Business Loans**
- **Personal Loans**

## PERMANENT RESIDENT CARDS

**Free Applications filled for Seniors for PR Cards**
**Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992**

**Scarborough & Markham Area**
**416-937-1563**
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

**Brampton**
**416-937-1563**
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)

# முத்தி நல்கும் காசி இராமேசுவரம்

*முதலாம் பக்கத்தொடர்ச்சி*

*சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்*



இராமலிங்கம்

இத்தலத்தின் மகிமையை நாயன்மார்கள் போற்றி யுள்ளார்கள். சிறப்பாக "தேடி மால் செய்த திரு இராமேச்சரம்" என்னும் "தேவியோடு சிலை அண்ணல் செய்த இராமேச்சரம்" என்றும் அலை வளர் தண்புனல் வார் சடைமேல் இராமேச்சரம்" என்றும் "குணமிலா அரக்கர் தமைக்கொன்று போர் ஆழியம் மால் வேட்கையால் செய்த கோயில்" என்றும் "தென்னாட்டிராமேச்சரம்" என்றும் வரும் அடிகள் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளது. மேலும் இத் தலத்தின் மகிமையை புராணங்கள், இதிகாசங்கள், இராமாயணம் ஆகிய நூல் களிலும் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு பாடல்பெற்ற தலமாகிய இராமேசுவரத் திருக் கோயிலை மகாசிவராத்திரி தினத்தில் இரவு முழுவதும் விழித்திருந்து நான்கு யாமப்பூசை களையும் கண்டு களித்தால் மனத்தில் அவன் அருளால் நிம்மதி நிலைபெறும். அன்று நாம் மனமுருகி இறைவனிடம் வேண்டுதல் செய்தால் இலகுவில் அவன் அருளைப் பெறலாம். மேலும் இத் திருக்கோயில் காசிலிங்கத்திற்கு பூசை வழிபாடு நிகழ்வதை இன்றும் காணலாம். இராமபிரானின் பூசை வழிபாட்டுக் கருத்தும் இதுவேயாகும். இத்தலம் பழமையும் புதுமையும் கொண்டு அற்புதமாக திகழ்வதை இன்றும் காணலாம். இராமேசுவரத் திருக்கோயிலை வைணவர்களும், சைவசமயத்தவர்களும் ஒன்று இணைந்து வழிபடுவது இத் தலத்திற்குரிய மகிமையாகும். இராமேசுவர மூலவர் பெருமான் பாரத மக்களின் உள்ளத்தில் நிலையான இடத்தினைப் பெற்றுள்ளார் என்பது உண்மை. இன்று உலகமெங்கும் எம்பெருமானின் திருவருள் வியாபித்து விளங்குவதைக் காணலாம்.

இராமேசுவரத் திருக்கோயிலின் கிழக்கு இராச கோபுரம் கடற்கரையை பார்த்த வண்ணம் அமைந் துள்ளது. இதுவே அக்கினி தீர்த்தமாகும். இதில் நீராடி மூழ்கினால் தீரா நோய்களும் தீரும். உடலும் உற்சாகம் பெறுவதோடு உள்ளத்தில் மனநிறைவும் ஏற்படும்.

அ. சிவானந்தநாதன்

இராமபிரான் இக்கடற்கரை மணலால் உருவாகிய சிவலிங்கம் தான் இக்கோயில் மூலவராக இருப்பது குறிப்பிடத்தக்கது. அக்கினி தீர்த்தம் நீராடிய பின்னர் பக்தர்கள் திருக்கோயில் உள்ள 22 விசேட தீர்த்தக் கிணறுகளிலும் நீராடி எம்பெருமானை போற்றி வழிபாடு செய்வார்கள். இதனால் தம் கவலைகள் நீங்கி இன்பம் பெறு வதை அனுபவரீதியாக பக்தர்கள் உணர்ந் துள்ளார்கள். இதனால் மூலவர் பெருமானின் அருள் வெள்ளத்தை சிறப்பாக உணர முடிகின்றது. திருக்கோயில் உள்ள தீர்த்தக் கிணறுகள் பல திருப்பெயர்களைக் கொண்டு உள்ளது. சிறப்பாக மகாலட்சு தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், காயத்திரி தீர்த்தம், சரசுவதி தீர்த்தம், சேது மாதவ தீர்த்தம், கந்தமாதன தீர்த்தம், கவாட்ச தீர்த்தம், கவாய தீர்த்தம், நளன் தீர்த்தம், நீல தீர்த்தம், சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம், பிரம்மகத்தி விமோசன தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கங்கா தீர்த்தம், யமுனா தீர்த்தம், கயாதீர்த்தம், சிவதீர்த்தம், அமிர்த தீர்த்தம், சர்வ தீர்த்தம், கோடி தீர்த்தம் என்பன அடங்கும். இத்தகைய தீர்த்தங்களில் நீராடுவதில் என்றும் காணாத ஓர் இன்பம் உள்ளத்தில் நிலைபெறுவதைக் காணலாம். மேலும் இத்தகைய தீர்த்தங்களில் நீராடுவோர் வடஇந்தியாவில் உள்ள கங்கை நதியில் நீராடிய பயனைப் பெறுகின்றார்கள். மேலும் இராமேசுவரத்தில் இருந்து தெற்கே 19கி.மீ. தொலையில் உள்ளது சேதுதீர்த்தம் ஆகும். இது மிகவும் புண்ணிய தீர்த்தமாகும். இதில் நீராடி மூழ்கினால் பிறவிப்பயன் இல்லை. சிறப்பாக கங்கை, யமுனை, காவிரி, வைகை, தாமிரபாணி போன்ற நதிகளில் நீராடிய பயனை இத் தலத்தில் பெறலாம். எனவே இராமேசுவரத் திருக்கோயில் உள்ள மூலமூர்த்தியும், தீர்த்தமும் மிகப் பெருமைக்குரியதாகும். எனவே மாரி சிவராத்திரியில் இத் தலத்தில் நீராடி இறைவனை போற்றினால் அவன் அருளால் சிவபுரவாழ்வு எளிதில் பெறலாம்.

இராமேஸ்வரத் திருக்கோயிலைச் சுற்றி ஏகாந்த இராமர் கோயில், காட்டுப் பிள்ளையார் கோயில்,



இராமேசுவர ஆலயம்

நம்பிநாயகியம்மன் கோயில், கோதாண்ட ராமர் கோயில், உச்செயினி மகா காளிகோயில், வெயில் உகந்த விநாயகர் கோயில், தேவி கோயில் ஆகியவற்றை கண்டு களித்து வழிபடுவதினால் மனத்தில் இன்பம் நிலை பெறுவதைக் காணலாம். இவ்வாறு பல கோயிலை வழிபடும் வாய்ப்பு இத் தலத்திற்குரிய சிறப்பாகும். எனவே சிவராத்திரி தினத்தில் இவ் ஆலயங்களை வழிபடுவதினால் மீண்டும் இத் தலத்தை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் நிலை பெறுவதைக் காணலாம். தொடரும்.....


J.A.B. TRAVELS & TOURS

Top Sales Award for Cathy pacific

ATAC MEMBER

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்

J.A.B TRAVELS & TOURS.


IATA

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ON

(905) 896-8320

NTE AUTO


New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்


151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்

விருது பெற்ற

VIVEKA PRINTER



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 BARBADOS BLVD., UNIT #4 SCAR., ON

416-410-6401



# விளையாட்டுத் தகவல்கள் - 118
# உலக கோப்பை - 2003 கிரிக்கெட்

### இரசிகர்களின் மன உளைச்சலால்: உயிர்தப்பிய இந்திய அணி

**Pool A**

| Match 15/21 | Played | Won | Lost | No Result | Tied | Points | NRR |
|---|---|---|---|---|---|---|---|
| Australia | 4 | 4 | - | - | - | 16 | +1.769 |
| India | 5 | 4 | 1 | - | - | 16 | +1.279 |
| England | 5 | 3 | 2 | - | - | 12 | +1.073 |
| Pakistan | 4 | 2 | 2 | - | - | 8 | +0.392 |
| Zimbabwe | 4 | 2 | 2 | - | - | 8 | -0.091 |
| Netherlands | 4 | - | 4 | - | - | 0 | -2.019 |
| Namibia | 4 | - | 4 | - | - | 0 | -2.814 |

**Pool B**

| Match 15/21 | Played | Won | Lost | No Result | Tied | Points | NRR |
|---|---|---|---|---|---|---|---|
| SriLanka | 4 | 3 | 1 | - | - | 12 | +1.730 |
| New Zealand | 5 | 3 | 2 | - | - | 12 | +0.402 |
| Kenya | 4 | 3 | 1 | - | - | 12 | -0.398 |
| West Indies | 4 | 2 | 1 | 1 | - | 10 | +1.032 |
| South Africa | 4 | 2 | 2 | - | - | 8 | +2.149 |
| Canada | 4 | 1 | 3 | - | - | 4 | -1.461 |
| Bangladesh | 5 | - | 4 | 1 | - | 2 | -2.513 |

**சச்சின், கங்குலி சதத்தில் நசுங்கியது நமீபியா: 181 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி**

பீட்டர்மாரிட்ஸ்பர்க், பெப்ரவரி 24: உலகக் கோப்பை 'ஏ' பிரிவில் நமீபியாவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் ஓட்ட மழையால் இந்திய இரசிகர்களின் நெஞ்சங்களை சச்சின் டெண்டுல்கரும், கங்குலியும் குளிர வைத்தனர்.

முதலில் ஆடிய இந்தியா 50 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து ஆடிய நமீபியா 42.3 ஓவர்களில் 130 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

சச்சின் டெண்டுல்கர் 152 ஓட்டங்களும், கப்டன் கங்குலி ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களும் எடுத்தனர். டொஸ்ஸில் வென்ற நமீபியா கப்டன் டியான் கோட்ஸே பந்துவீச்சைத் தேர்ந்தெடுத்தார்.

**சேவாக் அதிரடி:** தொடக்க ஆட்டக்காரர் வீரேந்திர சேவாக் தனது வழக்கமான அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். 24 பந்துகளில் 24 ஓட்டங்களை எடுத்த சேவாக், எதிர்பாராதவிதமாக வான் வுரென் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். சேவாக் ஆட்டமிழந்தையடுத்து, சச்சினுடன் ஜோடி சேர்ந்தார் கங்குலி. தொடக்கத்தில் சச்சின் மிகவும் எச்சரிக்கையுடனே ஆடினார். கங்குலியும் ஒற்றை ஓட்டம் எடுப்பதிலேயே கவனம் செலுத்தினார்.

சச்சினுக்கு 'வாழ்வு': தொடக்கத்தில் வான்வுரென் வீசிய பந்து, டெண்டுல்கரின் Bat இல் பட்டு, விக்கெட்டுக்கு மிக அருகே சென்றது. 32 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, லூயீஸ் பர்ஜர் பந்துவீச்சில் டெண்டுல்கர் கொடுத்த வாய்ப்பை ஜான் பெரி பர்ஜர் 'கோட்டை' விட்டார். அதன் பின்னர் டெண்டுல்கர் வாய்ப்பு கொடுக்காததுடன் தனது வழக்கமான ஆட்டத்தில் ஈடுபட்டார்.

இன்னிங்ஸின் 19ஆவது ஓவரில் தனது அரை சதத்தை பூர்த்தி செய்தார் டெண்டுல்கர். இதனிடையே கங்குலியும் தன்னம்பிக்கையுடன் ஆடத் தொடங்கினார். இருவரும் இணைந்து நமீபியப் பந்து வீச்சாளர்களை விளாச ஆரம்பித்தனர். 37வது ஓவரில் டெண்டுல்கர் தனது 34வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

டியான் கோட்ஸேவின் பந்து வீச்சில் அற்புதமான சிக்சர் மூலம் அரைச் சதத்தைக் கங்குலி கடந்தார் .

**நடுவர் தலை தப்பியது:** டியான் கோட்ஸேவின் பந்து வீச்சில் பளீரென டெண்டுல்கர் அடித்த பந்து நடுவருக்கு நேராகச் சென்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் குனிந்ததால் பாகிஸ்தான் நடுவர் ஆலம் திர் தலை தப்பியது. இப் பவுண்டரி மூலம் கங்குலி, சச்சின் இணைந்து 200 ஓட்டங்கள் கடந்தது.

151 பந்துகளில் 18 பவுண்டரிகளுடன் 152 ஓட்டங்கள் குவித்த டெண்டுல்கர், 48வது ஓவரில் வான் வுரென் பந்து வீச்சில் "க்ளீன் போல்ட்" ஆனார். ஒரு தின ஆட்டங்களில் தனது 20வது சதத்தை எடுத்த கங்குலி, 114 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 3 சிக்கர்கள், 6 பவுண்டரிகளுடன் 112 ஓட்டங்கள் எடுத்தார்.

யுவராஜ் சிங் அபாரம்: நமீபியாவின் அதிக பட்சமாக தொடக்க ஆட்டக்காரர் ஜெ. பர்ஜர் 29 ஓட்டங்களும், டி. கோட்ஸே 27 ஓட்டங்களும் எடுத்தனர். இந்தியாவின் யுவராஜ் சிங் அபாரமாகப் பந்து வீசி 6 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

## எஸ். கணேஷ்

**ஆட்டநாயகன் டெண்டுல்கர்:** 152 ஓட்டங்கள் எடுத்த சச்சின் டெண்டுல்கர் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப் போட்டியில் 2வது முறையாகவும், உலககோப்பைகளில் 7வது முறையாகவும் ஆட்ட நாயகனாக டெண்டுல்கர் தேர்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கென்யாவிடம் இலங்கை 'தலைகுனிவு'**



நைரோபி. பெப்ரவரி 25: நைரோபியில் திங்கட்கிழமை நடைபெற்ற உலகக் கோப்பை 'பி' பிரிவு ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் இலங்கையை 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கென்யா வென்றது.

இந்த பிரமாண்டமான வெற்றியால் சூப்பர் சிக்ஸ் வாய்ப்பையும் பிரகாசப்படுத்திக் கொண்டுள்ளது இந்த அணி.

முதலில் Bat செய்த கென்யா 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து ஆடிய இலங்கை 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்கள் எடுத்து சரணடைந்தது.

கென்யா, இதுவரை 4 ஆட்டங்களில் விளையாடி 3 வெற்றிகளைப் பெற்று 12 புள்ளிகளுடன் உள்ளது. அதே சமயம் இலங்கையும் 4 ஆட்டங்களில் விளையாடி 12 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இவற்றிற்கு அடுத்த படியாக மேற்கிந்தியத் தீவுகள் 3ஆம் இடத்திலும், தென் ஆபிரிக்கா 4ஆம் இடத்திலும் உள்ளன. நியூசிலாந்து 5வது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

டொஸ்ஸை வென்ற இலங்கை கப்டன் சனத் ஜெயசூரிய பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.

தொடர்ந்து சிறப்பாக வீசி வரும் சமிந்த வாஸ், இந்த ஆட்டத்திலும் முதல் ஓவரின் இரண்டாவது பந்திலேயே ரவீந்து ஷாவை எல் பி டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார். ஷா ஓட்டம் ஏதும் எடுக்கவில்லை.

அதன் பின் ஓடீனோவும் பிரிஜால் படேலும் ஜோடி சேர்ந்து ஓட்டங்களைக் குவித்தனர். அணியின் எண்ணிக்கை 7 ஓவர்களில் 46ஐ எட்டியது.

இந்நிலையில் வாஸ் பந்து வீச்சில் கீப்பர் சங்ககாரவிடம் ஆட்டமிழந்தார் படேல். அவர் எடுத்தது 12 ஓட்டங்கள். அடுத்து ஸ்டீவ் டிகோலா இறங்கினார். 10 ஓட்டங்களில் முரளிதரன் பந்து வீச்சல் எல் பி டபிள்யூ ஆனார். இதையடுத்து ஹிதேஷ் மோடி களமிறங்கினார்.

இந் நிலையில் 65 பந்துகளில் அரை சதத்தை ஓடீனோ எட்டினார். அதில் 5 பவுண்டரிகளும் 2 சிக்ஸர்களும் அடங்கும். அவர் 60 ஓட்டங்கள் எடுத்திருந்த போது டி சில்வா பந்து வீச்சில் ஸ்வீப் செய்ய முற்பட்டு முரளீதரனிடம் கட்ச் கொடுத்தார். அதன் பின் வந்தவர்களில் ஓடும்பே 26 ஓட்டங்களும் ஓங்கோன்டா 20 ஓட்டங்களும் எடுத்தனர். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இலங்கைக்குச் சோதனை: இலங்கைக்கு ஆரம்பமே சோதனையாக அமைந்தது. 3 ஓட்டங்களில் ஜெயசூரியா ஆட்டமிழந்தார்.

அத்தப்பத்து, திலகரத்ன இணைந்து ஓரளவு தாக்குப்பிடித்தனர். இந்நிலையில் அத்தப்பத்துவை 'கீளின் போல்ட்' செய்தார் ஒடோயோ.

பின்னர் டி சில்வா களமிறங்கினார். அணியிலேயே அதிக பட்சமாக 41 ரன்களை எடுத்தார். அவர் ஒபுயா பந்தில் ஆட்டமிழந்தார். திலகரத்ன 23 ஓட்டங்களில், ஒபுயா வீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன் பின் வந்தவர்களில் ஆனோல்டு மட்டுமே ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களை எடுத்தார்.

கென்யா தரப்பில் ஓடீனோவின் சகோதரர் காலின்ஸ் ஒபுயா 24 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**ஆறாவது முறையாக ஆட்ட நாயகனானார் சச்சின்!**




சிம்பாபேவுக்கு எதிரான ஆட்டத்தில் 81 ஓட்டங்கள் குவித்த சச்சின் டெண்டுல்கர் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகக் கோப்பைகளில் இதுவரை 25 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள சச்சின், ஆட்ட நாயகன் விருதைப் பெறுவது இது 6வது முறை. உலகக் கோப்பைகளில் அதிக முறை ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பெருமையை சச்சின் பெற்றுள்ளார்.


டெண்டுல்கருக்கு அடுத்த படியாக, இங்கிலாந்தின் கிரஹாம் கூச் (21 ஆட்டங்கள்), மேற்கிந்திய தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸ் (22 ஆட்டங்கள்), தென் ஆபிரிக்காவின் லான்ஸ் குளூஸ்னர் (12 ஆட்டங்கள்) தலா 5 முறை ஆட்ட நாயகன் விருதைப் பெற்றுள்ளனர்.


வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை
விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

VALLIN SUPER MARKET

• Fresh Vegetables • Meat
• Fish, Groceries Tamil Video & Audio Cassettes







416-724-5453

இவற்றுடன் இலங்கை, இந்திய, கனேடிய உணவுகளையும் தருகிறார்கள்



A VALLIN TAKEOUT & CATERING

416-283-1260

790 Military Trail, Unit #1, Scarborough, ON



# அன்புத் தமிழ்

சென்ற இதழின் தொடர்ச்சி....

### கவிதையும் ஓசையும்

மோனைகளும் எதுகைகளும் செய்யுளுக்கு ஓசை நயத்தைத் தருபவை. அவை பாடப்படும் பொருளுக்குப் பொருத்தமுறத் தெரிவுசெய்யப்படல் வேண்டும். சொல்வளம் உள்ள புலவருக்கு அவை இயல்பாய் வந்தமையும் தன்மையன. மோனை எதுகைகள் இயல்பாய் அமைந்து ஓசை நயஞ் செய்யும் சில பாடல்கள் பின்வருமாறு:

அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.
-(புறம் 142)

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமா - தானென்று
சாற்றினான் அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர். - (நளவெண்பா 365)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. - (திருமாலிகைத்தேவர் திருவிசைப்பா)

தீரத்திலே படை வீரத்திலே - நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரம் கண்டு
தருவதிலே உயர் நாடு.... (பாரதியார்)

ஓசையிலிருந்து பிறப்பது இசை. சீர்கள் அளவொத்து வருகையில் ஓசை தாளமிடும். பாவிலுள்ள ஓசை ஒழுங்கு தோற்றுவிக்கும் இசை, வண்ணம் எனப்படும். வண்ணமும் சந்தமும் ஒன்றென்று கூறுவர் சிலர். எனின், வண்ணம் தமிழ் மொழிக்கே உரியது. சந்தம் ஆரிய மொழி மரபைத் தழுவித் தமிழில் வழங்கப்படுவது.

வண்ண விகற்பம் (வேறுபாடு) இருபது வகை எனச் செய்யுள் இலக்கணம் கூறும். மிகவும் பொதுவானவை வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம் முதலியன.

வல்லெழுத்துக்கள் மிகுந்து தோற்றுவிக்கும் இசை வல்லிசை.
உதாரணம்:
ஆட்டம் பல ஆடிப் பலர் அந்தோ நிலை கெட்டார்
கூட்டம் பல கூடிப் பலர் கொட்டா விகள் விட்டார்
வேட்டை பல ஆடிப் பலர் வெறுங்கை யுடன் மீள்வார்
தேட்டம் பல தேடிப் பலர் சிறுவாழ் வுடன் மாள்வார்.
(பாடு மனமே! - வி. கந்தவனம்)

## கவிஞர் வி. கந்தவனம்

மெல்லெழுத்துக்கள் பெரிதும் பயின்று வருவது மெல்லிசை வண்ணம் எனப்படும்.
உதாரணம்:

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.
(கம்பராமாயணம்)

இடையின எழுத்துக்கள் மிகுந்து வருவது இயைபு வண்ணம் எனப்படும்.
ஓர் உதாரணம்:
பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலில் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீர் இரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி.
(- பெரியபுராணம்)

மேற்போந்த உதாரணங்கள் கருத்து வேறுபாடுகளுக்கு ஏற்ப செய்யுள் ஓசைகளும் மாற்றம் பெறுவதை எடுத்துக் காட்டுகின்றன. இராமனை மயக்கித் தன் வயத்படுத்தும் நோக்குடன் கவர்ச்சியான அணிகலன்களை அணிந்து அழகிய கோலத்தில் வரும் சூழ்ச்சிக்காரச் சூர்ப்பனகையின் தோற்றத்தைப் படிப்பவர் கண்முன் சொல்லோவியமாகத் தீட்டுகின்றார் கம்பர். அதனினும் மேலாக அவளின் குலுக்கு மினுக்குகளின் ஓசைகளையும் மெல்லிசை வண்ணத்தால் எமது செவிகளுக்குக் கேட்கச் செய்கின்றார்.

இவ்விதமே மெய்பாடுகளைக் காட்டவும் வண்ண விகற்பங்கள் உதவுகின்றன. மெய்ப்பாடுகளாவன நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, அமைதி. இராவணனின் வெகுளி வெடிக்கின்றது இப்பாடலில்:

சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதில் வரியணை இருந்த தென்னுடல்.
(- கம்பராமாயணம்)


**தொழில் புரிய முடியாத நேரத்தில் உதவுபவர் - யார்?**



* $1000 வருமானவரி அற்ற மாத வருமானம். (2 வருடங்கள் வரை)
* 65 வயது வரை நன்மை (benefit) பெறலாம்.
* 24 மணிநேர பாதுகாப்பு.
* மருத்துவப் பரிசோதனை தேவை இல்லை.
* உடனடிக் கொடுப்பனவு (No waiting period)
* $100,000 வரையான ஒரு கட்டக் கொடுப்பனவு.

* சில நிபந்தனைகளுடன்

$53.20 /mth

மேலும் எங்களிடம் பெறக் கூடிய சேவைகள்

- Life insurance
- Critical illness insurance
- Mortgage insurance
- Health and Dental Benefits
- Registered Education Savings Plan (RESP)
- Investments and savings plan
- RRSP loan

இவை பற்றிய பூரண ஆலோசனைகளைப் பெற

**Ken Teh - 416.803.6096**
**kenteh@sympatico.ca**

**YARLCAN**
**STEAM CLEANING**




உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: **(905) 887-7436** Cell: **(416) 721-9709**



# நோயற்ற வாழ்வு வாழ....



பழங்காலம் தொட்டே தமிழர்கள் உடம்புக்கு "மெய்" என்றும் காயம் என்றும் பெயரிட்டு வழங்கி வந்தனர். காயமே இது பொய்யடா காற்றடித்த பையடா என்ற சித்தர் பாடல் இதனை வலியுறுத்தும். ஆயினும் சிலர் இதனை பொய் என்றும் மாயம் என்றும் கருதினர். கொடிய நஞ்சுடைய பாம்பை நல்ல பாம்பு என்பது போல் அழியும் தன்மை உடைய இவ் உடம்பை மெய் என்றனர் என்பதுதான் அவர் கருத்தாக இருக்கலாம்.

உடலை நிலைக்கச் செய்த சித்தர்கள் இவ் உடலை மெய், காயம் என்றனர் என்பது தான் உண்மை. எனினும் பொய், மாயம் என்று உடலை அலட்சியம் செய்து வீணாக்கக் கூடாது. அரிது அரிது மானிடர் ஆதல் அரிது. பிறவிகளின் சிகரம் மனிதப் பிறவி. எனவே பிறவியின் பயனாகிய அறம் பொருள் இன்பம் ஆகியவற்றைப் பெறுவதற்கு நோயில்லா உடலும் நோயில்லா மனமும் வேண்டும். இன்பத்தை அனுபவிப்பதற்கு மாத்திரமன்றி மெய்ஞானத்தை பெறுவதற்குரிய சாதனை செய்வதற்கும் இவ் உடல்தான் காரணமாகும். உடம்பு ஒரு கோயில் ஒன்பது வாசல் கோட்டை நன்கதைப் பேணி என்புருக இறைவனை இறைஞ்சி இன்புற்று வாழலாம்.

*காயமே கோயிலாக் கடிமனம் அடிமையாக*

**நா. க. சிவராமலிங்கம்**

*வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலாய் நிறையநீர் அமையஅட்டி*
*பூசனை ஈசனார்க்கு போற்றுவித் தாட்டினோமே!*

இது அப்பர் வாக்கு. ஆகையால் விசையுறு பந்தினைப் போல் வேண்டியபடி செயலும் உடலும் அசைவறு மதியும் அவசியம். எனவே உடம்பை உறுதியாக்குங்கள் என்று திருமந்திரம் செப்புகின்றது.

உடம்பால் அழியின் உயிராரழிவர்
திடம்படமெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

உடம்பை வளர்க்கும் உபாயங்களுள் முக்கியமானது அதனை நோயில்லாமல் காப்பதேயாகும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது உய்த்துணரத்தக்கது. நோய் வருவதற்கான காரணங்களை நீக்கி தம் உடலை காத்துக் கொள்ளும் அறிவுடையோர்க்கு நோய் வராது. அதுவே மக்கள் நோயில்லா நெறிகளை நன்கு கையாண்டு உடம்பைப் பேணி உயிர் வாழ வேண்டும். அந்த நெறிகளை ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்த பெரியோர்கள் நூறு ஆண்டுகள் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. நீண்டநாட்கள் வாழ்வது என்பது ஒரு வரப்பிரசாதமெனினும் உடல் நலமும் உணவுப் பழக்க வழக்கங்களும் ஒழுக்க சீலமும் எம்மை மண்ணில் எண்ணம் போல் நல்ல வண்ணம் திண்ணமாக வாழ வைக்கின்றது. நோய் தீர்க்க வள்ளுவர் கூறும் வழி இது.

நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

**நோயின்றி வாழ்வதற்கான வழிமுறைகள்**

**சுத்தமான காற்றைச் சுவாசித்தல்**

பிராணாயாம (மூச்சுப் பயிற்சி) மற்றும் தேகப் பயிற்சி செய்தல், சுத்தமான நீரை அருந்துதல், காப்பி, ரீ, சோடா, மதுபான வகைகள் போதைப் பொருள்கள் ஆகியவற்றைத் தவிர்த்தல்

பசித்த பின் உணவு அருந்துதல். சைவ உணவே மிகச் சிறந்தது. அன்னம் சுத்தமான எண்ணம் சுத்தமாகும். சமைக்காத பச்சைக் காய்கறிகளை அதிகம் உண்ணுதல். உப்பு, காரம், புளி அதிகம் பாவியாது விடுதல். அபின், கஞ்சா, புகையிலை ஆகியவற்றைத் தவிர்த்தல். சுத்தமான, மென்மையான இறுக்கமற்ற ஆடைகளை அணிதல். சுத்த நீரில், மெல்லிய சூடுள்ள நீரில் குளித்தல். வாரம் ஒரு முறையாவது உபவாசம் இருத்தல். நோய் வந்தால் பத்தியம் காத்தல். பிரமச்சாரிய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல். சூதாட்டம் தவிர்த்தல் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல். தன்னால் இயன்ற மட்டும் தான தர்மம் செய்தல். மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் செய்து இறைவழிபாடு செய்தல்.

இவற்றைக் கடைப்பிடித்தால் இறுதி வரை இன்பமாக இறுமாப்புடன் வாழலாம்.


**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை**
**விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**



"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம்

**ஸ்ரீநிவாஸ் நிலையம்**








**சகல இந்துமத கிரியைகள்**

- திருமணம்
- பூப்புனித நீராட்டுவிழா
- குடிபுகுதல்
- வியாபாரதோச பரிகாரங்கள்
- சமய சம்பந்தமான மங்கல வைபவங்கள்

சகல இந்துமதக் கிரியைகளும் ஆகம விதிமுறைப்படி செய்வதற்கு

**சர்வன் ஐயர்** (சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்)
**குகன் ஐயர்** (பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா)
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி

சர்வன் ஐயர் - 416-609-0863, 416-292-0423
416-891-6360
குகன் ஐயர் - 416-292-6089



**விசேட வைபவங்களுக்கு (பிராமணாள்) சைவ உணவுகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்**



**ஞானம்ஸ் ஸ்ருடியோ**

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough





**வானத்தில் பறப்பது நீங்கள்**
**வசதிகள் செய்து தருவது நாங்கள்**

FLYAIR TRAVEL INC.

நகரில் மிகக்குறைந்த விலையில் விமானப் பயணச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**Tel: 416-285-9900**
**Fax:416-285-9800**
**e-mail: flyair@bellnet.ca**





0% முதலீடு: (எதுவித பணமும் அறவிடப்படமாட்டாது**)

**மோட்கேஜ் பெறுவது இலகுவாக்கப்பட்டுள்ளது!!!**

வங்கிகளினால் குறிக்கப்பட்ட வட்டி வீதத்தை விட சிறந்த வீதத்தில் பெறமுடியும்.



முதலாவது, இரண்டாவது....அடமானம் வீடுகளிற்கு, வியாபாரத்திற்குப் பெறலாம்.



- புதிதாக கனடாவிற்கு வந்தவர்கள்
- வருமானம் காட்டமுடியாதவர்கள் / Welfare + EI
- சொந்தத் தொழில் புரிபவர்கள்
- கிறடிட் பிரச்சினைஉள்ளவர்கள்
- கொடுப்பனவில் சிக்கலானவர்கள்
- Foreigners & Retirees

எந்தெந்த நிதிநிறுவனம் இலகுவாக மோட்கேஜ் கடனுடன் சிறந்த வட்டி வீதம் காடுப்பவர்கள் என்பது எமக்குத் தெரியும்.

எமது மற்றய சேவைகள்:
* கிறடிட் பழுதானவர்கள் * திவால் ஆனவர்கள்
* அகதி கோரியவர்களிற்கு * மாணவர்களிற்கு
கிறடிட் காட், கார் லோன் பொருட்களுக்குரிய கடன் பெற்றுத்தருதல்

** சில நிபந்தனைகளுடன்

இப்பொழுது நீங்கள் வீட்டுச் சொந்தக்காரர்களாக இருந்தால் உங்கள் மோட்கேஜை வேறு நிதிநிறுவனத்திற்கு மாற்றி, குறைந்த வட்டி வீதத்தில் பெற்றுத் தரமுடியும்.

**George : 905-294-6001/Cell: 416-450-9341**

நகைச்சுவைத் தொடர்....

# ராசம்மா ராச்சியம்

**84**

